**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# The Qualities of Women by Valluvar

**Dr. S. Revathi Pappathi,** Assistant Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0009-2433-8931**
**DOI: 10.5281/zenodo.14752689**

## Abstract

*"Thirukkural" is considered to be the best of the didactic book that is considered to be unparalleled in the history of world literature. "Thirukkural" is the source of Tamil culture and virtue and the life of the Tamils. Thiruvalluvar has recorded the glory of women and their qualities in many verses in "Thirukkural". This article aims to study and bring them to light. Thiruvalluvar's point of view summarises not only the virtues of fear, chastity and chastity as the virtues of women but also good deeds as a wife and mother. Most of the opinions expressed by him are still followed by Tamil families. If a woman has to do many tasks to support her family, she should take care of her health first. Valluvar says that she must be tireless in protecting her reputation. In Thiruvalluvar's view, the dignity of the wife is the beauty of the family. The children of the family are the ornaments of that beauty. So, women are responsible for the excellence of those children. So, Thiruvalluvar emphasises certain principles of motherhood and its duties and attributes.*

**Keywords:** Woman's Pride, Duty, Domesticity, Hospitality.

## References

[1] Saraswati, S. U. Dr. *Kuravanchi Ilakkiyangalil Pengal.* Kavya Publishing House, First Publication, 2008.
[2] Neudunchezhiyan, T. Dr. "Keezhavor Manpugazh." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol-2 Feb 2020.
[3] Parimelazhkar. *Thirukural Moolamum Uraiyum*. Uraiparisu Publishing House, 2019.
[4] Mathavan. V. R. Dr. *Naanmanikadigai- Vilambi Naganar.* Tamil University Publication, 2001.
[5] Mugeshwary, K. Dr. "Ara Ilakiyankazhil Pen Nilai Pathivukal." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol-2 Feb 2020.
[6] Meiyappan, Dr. *Bharatiyar Kavithaigal*. Manivasaka Thentral Nilayam, 2000.
[7] Jayakanthan, Dr. *Kamparamayanam – Sundarakandam*. Meenakshi Bookstore, 2019.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# வள்ளுவன் காட்டும் மங்கையின் மாண்புகள்

**முனைவர் S. ரேவதி பாப்பாத்தி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில். தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0009-2433-8931**
**DOI: 10.5281/zenodo.14752689**

**ஆய்வுச்சுருக்கம்**

*வள்ளுவர் பார்வையில் பெண்களுக்குரிய மாண்புகளாக அச்சம், நாணம், மடம், கற்பு ஆகிய நல்லொழுக்கங்கள் மட்டுமில்லாமல் நற்செய்கைகளையும் ஒரு மனைவியா, தாயாக, வள்ளுவர் தொகுத்துக் கூறுகிறார். அந்த அதிகாரங்களில் கூறும் கருத்துக்களில் பெரும்பாலானவை இன்னும் தமிழ்க் குடும்பங்களில் பின்பற்றப்படுகின்றாள் மனைவி என்ற சொல்லுக்கு மனையை உடையவள் என்று பொருள். மேலும் ஒரு பெண் தன் குடும்பத்தினருக்கு உதவியாகப் பல பணிகளைச் செய்ய வேண்டுமென்றால் முதலில் அவள் உடல்நலத்தைப் பேணி மனஉறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் அவள்தன் புகழையும் காப்பதில் சோர்வில்லாதவளாகவும் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். மேலும் மனஉறுதியால் தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதே மிகவும் சிறந்தது என்றும் வள்ளுவர் கூறுகிறார் வள்ளுவரின் பார்வையில் மனைவியின் மாண்பு குடும்பத்திற்கு அழகு. அந்த அழகுக்கு அணிகலன்களாக அமைவது அந்தக் குடும்பத்தின் குழந்தைகள். அக்குழந்தைகள் சிறந்து விளங்க பெண்களே காரணமாகத் திகழ்கின்றனர். எனவே தாய்மைக்கு முதலிடம் தந்து அவளின் கடமைகளுக்கும் பண்புகளுக்கும் வள்ளுவன் சில கோட்பாடுகளை வலியுறுத்துகிறார்.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்ணின் பெருமை, கடமை, இல்லறம், விருந்தோம்புதல்

**முன்னுரை**

உலக இலக்கிய வரலாற்றில் ஒப்பற்றதாக எண்ணத்தகும் அற நூல்களுள் தலை சிறந்ததாகக் கருதப்படுவது திருக்குறள். தமிழர் பண்பாட்டின் வாழ்விடமாகவும் தமிழர் தம் வாழ்வியல் நெறியாகவும் *திருக்குறள்* விளங்குகிறது. இத்தகைய சிறப்பு கொண்ட திருக்குறள்களின் திருவள்ளுவர் கூறும் பெண்களின் பெருமைகளையும் அவளின் குணநலன்களையும் பல குறட்பாக்களில் பதிவிட்டுள்ளார். அவற்றை ஆய்ந்து வெளிக் கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

தாய்நாடு, தாய்மொழி, இயற்கை அன்னை என்பன போன்ற உயர்வான சொற்களால் பெண்ணை நாம் பல விதங்களில் பெருமைப்படுத்துகிறோம். செம்மொழி வரிசையில் சிறப்பிடப் பெறும் கிரேக்க இலக்கியத்தில் கூட சாஃபோ என்ற ஓர் பெண்பாற் புலவரைப் பற்றி

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. ஓர் இல்ல கிழத்தியின் தலையாயக் கடமைகளைப் பற்றி விளக்கம் தரும் *தொல்காப்பியம்* பெண்ணிய மாண்புகளை,

**கற்பும், காலமும், நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும், நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும், சுற்றும் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்காப்பியம்)**

என்று கட்டமைத்துள்ளது.

சிலப்பதிகாரத்தில் மதுரை காண்டத்தில் கண்ணகி தன் இல்லற கடமைகளைச் செய்ய இயலாமல் மனம் வருந்துவதை,

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை (சிலப்பதிகாரம்)**

என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் செப்புகிறது.

**பெண்ணின் பெருமை**

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள் கற்பென்னும்**
**திண்மை யுண்டாகப் பெறின் (குறள்., 54)**

அறத்துப்பாலில் வள்ளுவன் "பெண்ணின் பெருந்தக்க யாவுள்" என்ற வினாவினை எழுப்பி பொருட்பாலில்

**பெண்ணேவல் செய்தொழுகும் அண்மையின்**
**பெண்ணே பெருமை உடைத்து (குறள்., 907)**

பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் நான் இன்றித் தன் இல்லானது ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆணின் தன்மையை குறித்து பெண் நாணுவாள் அத்தகைய பெண்மை பெருமை உடையவள் அன்று திருவள்ளுவன் பெண்ணே பெருமை உடைத்து என்ற பொருளை பொருட்பாலில் வைக்கிறார். மேலும், காமத்துபாலில்,

**கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
**பெண்ணின் பெருந்தக்க தில் (குறள்., 1137)**

கடல் போல் கரையில்லாத காதல் நோய் துன்புறுத்தினாலும் கூடப் பொறுத்து மடலோறாமல் இருக்கும் பெண் பிறவியைப் போலப் பெருமையான பிறவி இவ்வுலகத்தில் வேறு இல்லை என்று பெண்ணின் பெருமைகளை வள்ளுவன் எடுத்துரைக்கிறார்.

**பெண்ணின் தனிப் பண்புகள்**

பெண் என்பவள், மகளாக, சகோதரியாக, தோழியாக, மனைவியாக, தாயாக வலம் வருபவள். பெண்ணின் ஆற்றலையும் சக்தியையும் வள்ளுவன் தன் குறட்பாக்களின் மூலம் பதிவிடுகிறார். பெண்கள், ஆண்களைக் காட்டிலும் வலிமை உடையவள்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

ஆண்கள் உடல் பலத்தால் வலிமையானவன் என்றால் அத்தகைய ஆணை இந்த பிரபஞ்சத்திற்கு பெண் எத்தகைய சக்தி வாய்ந்தவளாக இழந்த பெண்கள் இவ்வுலகில் எவ்வளவு பேரிடர்களைச் சந்தித்த பொழுதும் அவள் தன்னையும் காத்தும் தன் குழந்தைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் ஆனால் பெண்களைக் காட்டிலும் குறைவே என்று கூறலாம் இத்தகையச் சிறப்பைத் திருவள்ளுவர்.

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலாா் பெண் (குறள்., 56)**

கற்பு நெறியில் தன்மையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காப்பாற்றி உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

**மனைவியின் மாண்பு**

திருக்குறள் அற நூல்களில் முதன்மையானதாக போற்றப்படுகிறது. இந்நூல் இல்லற வாழ்வின் மேன்மையை சொல்வதற்கு என்றே இல்லறவியலை வகுத்துள்ளது. இல்வாழ்வின் நோக்கம் மேன்மை உடையதாய் அமைய பிறர் பழிக்காத நல்வாழ்வை வாழ வேண்டும் என்று கூறுகிறது. இதற்கு,

**அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று (குறள்., 49)**

என்ற குறளே சான்றாகிறது. இத்தகு இல்வாழ்க்கை சிறப்புடையதாய் அமைய மாண்புடைய மனைவியின் துணைதேவை அவளாலே வாழ்வு சிறக்கும் என்றுரைக்கிறார். இதனை சிறப்புப் பொருந்திய இல்வாழ்க்கையின் பெருமைக்குத் துணையாக இருப்பது வாழ்க்கைத்துணை இல்வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவள் இல்லாள் இல்வாழ்க்கையின் சிறப்பிற்கும் வெற்றிக்கும் இல்லாளே முழுப்பொறுப்பு உடையவள். ஒருவனது சாதனைகளுக்குப் பின்னே ஒரு பெண் இருக்கிறாள் என்பார்கள். எனவே ஒருவனது வெற்றிக்குத் துணையாக நிற்பவள், அவனது துணைவியே மனைவியை 'வாழ்க்கைத்துணை' என்றும் "இல்லாள்" என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்., 51)**

இல்வாழ்வுக்குத் தகுந்த சிறந்த பண்பு உடையவளாகித் தன்னை மணந்தவனின் வளமைக்குத் தகுந்தப்படி நடப்பவளே சிறந்த வாழ்க்கைத் துணைவி ஆவாள்.

**சிறைகாக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர்**
**நிறை காக்குங் காப்பே தலை (குறள்., 57)**

தம்மைத் தாமே காத்துக் கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியமையாகும். மகளிர் சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிரைத் தலைவர் சிறையால் காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்? அவர்தமது நிறையால் காக்கும்

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

காவலே தலையாய காவல் என்று வள்ளுவர் பெண்ணின் மாண்புகளாக கருதுகிறார். மேலும் பாரதியும் பெண் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என்பதனை,

ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைத்தோங்குமாம் பேணு நல்லறத்தோடிங்குப் பெண்ணுருவப் போந்து நிற்பது தாய் சிவசக்தியாம் நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாகும் (பாரதியார் கவிதைகள்)

எனப் பெண்மையைச் சிறப்பிக்கின்றார்.

**விருந்தோம்பல் விரும்பும் மகளிர்**

விருந்தோம்பல் பண்பினை கம்பர், இராமனைப் பிரிந்து அசோகவனத்தில் இருக்கும் சீதையின் வாயிலாக கூறுவார்.

**அருந்து மெல்லட்கு ஆரிட அருந்துமென்று**
**அழுங்கும் விருந்து கண்ட போது எண்ணுறுமோ**
**என்ற விம்மும் மருந்து உண்டு கொல்யான்**
**கொண்ட நோய்க் கென்று மயங்கும் இருந்த**
**மாநிலம் செல்லரிடத்திடவ மாண்டெழாதாள் (கம்பராமாயணம் - காட்சிப்படலம்)**

என்ற பாடல் விருந்தனர்வரின் தானில்லாது இராமன் என்ன செய்வனோ என்று எண்ணிச் சீதை வருந்திய நிலைமைப் புலப்படுத்துகிறது. விருந்தோம்பலுக்கு தனி அதிகாரமே தந்த வள்ளுவர் முகர்ந்து பார்த்தாலே வாடி விடக் கூடியது அனிச்சமலர் அத்தகைய மலரைப் போன்றவர்கள் விருந்தனர்கள் என்பதை,

**மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரித்து**
**நோக்கக் குழையும் விருந்து (குறள்., 90)**

என்று விருந்தினர் பற்றியும் விருந்தோம்பல் பண்பினையும் கூறுகிறார். இத்தகைய விருந்தோம்பல் பண்பினை போற்றும் குணம் உடையவர்கள் பெண்கள் என்ற சிறப்பினைத் திருவள்ளுவர்.

**அகனமர்ந்து செய்யாள் உறையும்முகம் மலர்ந்து**
**நல்விருந்து ஓம்புலான் இல் (குறள்., 84)**

என்ற குறள் மூலம் இல்லத்தை ஆளுபவளாகிய இல்லாள் முக மலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுவதால் தான் அவ்வீட்டில் திருமகள் குடி இருக்கின்றாள் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**பெண்ணின் தாய்மைச் சிறப்பு**

மனித வாழ்வு உறவுகளால் சூழப்பட்ட நிலையில் அமைந்துள்ளது. இவற்றில் எல்லா உறவுகளும் சிறப்பு வாய்ந்தவையாக கருதப்படுகிறது. இருப்பினும் தாயின் சிறப்பை பல அறஇலக்கியங்கள் பதிவு செய்துள்ளது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**… என் செயினும்**

**தாயின் சிறந்த தமரில்லை (நான்மணிக்கடிகை. 351: 2)**

என்ற வரிகள் தவறு செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய தாயை விடச் சிறந்த உறவு வேறில்லை என நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் ஆய், ஞாய், அன்னை, நற்றாய், ஈன்றாய் என்ற பெயரில் தாய் என்றழைக்கப்பட்டிருக்கிறாள் அதே போல் அறஇலக்கியங்களிலும் தாயார், ஈன்றாள், அன்னை என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்கிறாள். இத்தாயின் உள்ளத்தை திருவள்ளுவர்,

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள்., 69)**

தம் மகனைக் கல்வி ஒழுக்கங்களால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் கூற அதைக் கேட்ட தாய் அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் மிகுதியாக மகிழ்வாள் என்று தன் மகனின் நினைத்து தாயின் மகிழ்ச்சியினைச் சுட்டியுள்ளார்.

**தொகுப்புரை**

பெண்மைக் குணங்களின் அன்பு, மென்மை, கற்பு, அடக்கம், பொறை போன்ற சிறப்புத் தன்மைகள் பெண்ணின் இயலாமையாகக் கணக்கிடப்பட்டது. திருக்குறளில் பெண்ணுரிமை பற்றிய சிந்தனைகள் இல்லை. ஆனால் பெண்ணுக்குத் தன்நிலையை உணர்ந்து எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டிய சிந்தனைகள் சொல்லப்பட்டுள்ளன. பெண்களுக்கு இயற்கையாகவே உள்ள குணநலன்களை அடிப்படைகளாகக் கொண்டு அத்தகைய குணநலன்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்னும் வரையறைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் நாளடைவில் ஆண்கள் தங்களின் ஆளுமையைப் பெண்ணிடத்தில் எளிமையாகச் செலுத்துவதற்கு இத்தகைய மென்மையான குணங்கள் வழிகோலின.

**குறிப்புகள்**

[1] சரஸ்வதி, சு, முனைவர். *குறவஞ்சி இலக்கியங்களில் பெண்கள்.* காவியா பதிப்பகம், 2008.

[2] நெடுஞ்செழியன், தி. முனைவர். “கிழவோள் மாண்புகள்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol. 2, Feb. 2020.

[3] பரிமேலழகர். *திருக்குறள் மூலமும் உரையும்.* உரை பரிசு பதிப்பகம். முதல் பதிப்பு, 2019.

[4] மாதவன், வி. ஆர், முனைவர். *நான்மணிக்கடிகை - விளம்பின் நாகனார்.* சாந்தா பப்ளிசர்ஸ், 2003.

[5] முகேஸ்வரி, கா. முனைவர். “அற இலக்கியங்களில் பெண்நிலை பதிவுகள்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol. 2, Feb. 2020.

[6] மெய்யப்பன், முனைவர். *பாரதியார் கவிதைகள்.* தென்றல் நிலையம், முதல் பதிப்பு, 2000.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

[7] ஜெயகாந்தன், முனைவர். *கம்பராமாயணம் – சுந்தரகாண்டம்.* மீனாட்சி புத்தக நிலையம், 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.